1981 மார்ச் 5]

திரு. இரா கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளிக்குப் பிறகு கைத்தறி உற்பத்தி நிலையங்களிலே தேக்கம் இருந்து வருகிறது. எனவே, கைத்தறித் துணிகளை தற்சமயம் விற்பனை செய்வதற்கு இந்த அரசு விசேஷ தள்ளுபடியை அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதை மனதிலே கொண்டுதான், கைத்தறி எக்ஸ்போ பொருட்காட்சிக்கு பல மாநிலங்களிலே இருந்து இங்கே வருகை தந்து, அதற்கு 20 சதவீதம் தள்ளுபடி கொடுக்கும் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியது. ஆகவே, கைத்தறி தேக்க சூழ்நிலை இருக்காது.

பிச்சையெடுப்பதை தடுக்கும் சட்டம்.

*வினா எண் 394—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் சென்னை நகரில் நடைமுறையில் உள்ளது.

(ஆ) பிச்சைக்காரர்கள் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு, பிச்சைக்காரர் விடுதிக்கு அனுப்பப்படுகின்றனர்.

திரு. து. புருஷோத்தமன் : அவை நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இப்படி மரியாதையோடு கூறுவார்கள் ; எனவே அப்படிச் சொல்கிறேன். தற்போது கடந்த ஓராண்டு காலமாக சென்னை நகரிலே பிச்சைக்காரர்கள் நடமாட்டம் அதிகமாகி இருக்கிறது. குறிப்பாக தொழுநோயால் அதிகமாக பாதிக்கப்பட்டு, அந்தப் பிச்சைக்காரர்கள் நடமாட்டம் சென்னை நகரிலே அதிகமாகி இருக்கிறது. ஆகவே, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டதே, அதை மூடிவிடாமல் நடத்துகிறார்களா ? மேலும், பல பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் திறக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முன்வருவார்களா? அதைப்போல், தொழுநோய்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்க, அவர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் திறக்கும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டில் எத்தனை பிச்சைக்காரர்கள் பிடிக்கப்பட்டார்கள் என்று கேட்டார்கள். மொத்தம் 395 நபர்கள். இதிலே ஆண்கள் 333; பெண்கள் 65. தவிர, சென்னை நகரிலே அரசு சார்பில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு நடத்தப்படுகின்றதா என்று கேட்டார்கள். சென்னை நகரிலே அரசு சார்பில் பிச்சைக்காரர்கள் விடுதி நடத்தப்பட வில்லை. தயா சதன் என்ற தனியார் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. செங்கை மாவட்டத்தில் பிச்சைக்காரர்கள் நல விடுதி அரசின்கீழ் நடத்தப்பட்டு வருகின்றது.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, சென்ற ஆண்டு பிச்சைக்காரர்களைப் பிடித்து, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்ததைப்பற்றிய கணக்கைக் கொடுத்தார்கள், தமிழகத்திலே மொத்தம் எத்தனை பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாடு அரசு 10 இடங்களில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளன. அதைக்கூட இங்கே கூற விரும்புகிறேன்.

மாவட்டம். (1)	ஊர். (2)
செங்கற்பட்டு	பரனூர்.
தென் ஆற்காடு	உளுந்தூர்ப்பேட்டை.
தருமபுரி	பர்கூர்.
புதுக்கோட்டை	புதுக்கோட்டை.
பெரியார்	விண்ணப்பள்ளி.
தஞ்சாவூர்	மனையேறிப்பட்டி.
மதுரை	புதுப்பட்டி.
வட ஆற்காடு	மல்லவாடி.
தருமபுரி	செல்லியம்பட்டி.
சேலம்	தேவியாக்குறிச்சி.

மொத்தம் 10 இடங்களில் தமிழக அரசு தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்களை நடத்தி வருகிறது.

1981 மார்ச் 5]

[முற்பகல் 10–10]

டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இடங்களில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இல்லங்கள் கிடைபெற்று வருகின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டபோது அதிலே சேர்க்கப்பட்டிருந்த தொழுநோய் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை எவ்வளவு? இப்போதுள்ள எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அந்த பத்து இடங்களிலுள்ள எண்ணிக்கை என்னிடம் இல்லை. சென்னை நகரில் கடந்த பத்து ஆண்டுகளில் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு இல்லங்களில் அனுப்பப்பட்ட பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை என்னிடத்தில் இருக்கிறது.

ஆண்டு.	ஆண்கள்.	பெண்கள்.
(1)	(2)	(3)
1970	152	52
1971	381	43
1972	302	91
1980–81	333	62

1980–81 ஆம் ஆண்டு மொத்தம் 395 நபர்கள்.

•

நடமாடும் செயற்கைமுறை உள்ளீட்டுப் பணி

*வினா எண். 395— திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் தாலுக்காவில் நடமாடும் Artificial input Service நடந்து வந்தது ஏன் நிறுத்தப்பட்டது?

(ஆ) மீண்டும் தொடரப்படுமா?

(இ) எப்பொழுது தொடரப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) கொடைக்கானல் தாலுகாவில் நடமாடும் Artificial input Service நிறுத்தப்படவில்லை. இந்த நடமாடும் ஊர்தி சம்பந்தப்பட்ட விரிவாக்க கால்நடை உதவி மருத்துவர் பதவி காலியாக இருப்பதால், கொடைக்கானல் கேந்திர கிராம நிலைய கால்நடை உதவி